www.Padasalai.Net www.TrbTnpsc.com

SRIMAAN COACHING CENTRE-TRICHY-UG-TRB-
தமிழ் -UNIT-1( NEW SYLLABUS) STUDY MATERIAL-
TO CONTACT:8072230063.

2023-24
SRIMAAN

# SRIMAAN

# UG-TRB

# தமிழ்

அலகு-1

## UG-TRB MATERIALS

TAMIL/ ENGLISH / MATHS / CHEMISTRY/ PHYSICS
BOTANY/ ZOOLOGY/HISTORY /GEOGRAPHY AVAILABLE.

PG-TRB STUDY MATERIALS:–TAMIL/ENGLISH/ MATHEMATICS/PHYSICS
CHEMISTRY/COMMERCE (T/M & E/M)/BOTANY (T/M & E/M)/ ZOOLOGY
HISTORY (T/E)/ECONOMICS (T/E)/ GEOGRAPHY /BIO-CHEMISTRY
PGTRB-COMPUTER INSTRUCTOR GRADE-I -TO CONTACT -8072230063.

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

SRIMAAN COACHING CENTRE-TRICHY-UG-TRB-தமிழ் -UNIT-1( NEW SYLLABUS) STUDY MATERIAL-TO CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

# TRB POLYTECHNIC LECTURER MATERIALS:

MATHEMATICS / ENGLISH /PHYSICS / CHEMISTRY/COMPUTER SCIENCE/ IT / EEE /ECE /EIE/ICE/MECHANICAL/CIVIL/MOP AVAILABLE.

UG-TRB: ALL SUBJECT STUDY MATERIALS AVAILABLE.

SCERT/DIET/GTTI STUDY MATERIAL AVAILABLE.

DEO & BEO (T/M & E/M) STUDY MATERIALS AVAILABLE.

TNPSC (CESSE)-(T/M & E/M) STUDY MATERIAL AVAILABLE.

PG-TRB COMPUTER INSTRUCTOR GRADE-1 –FULL STUDY MATERIAL WITH QUESTION BANK AVAILABLE

TNPSC-ASSISTANT DIRECTOR OF CO-OPERATIVE AUDIT
TNPSC-JSO STUDY MATERIAL AVAILABLE.

TNEB-(ASSESSOR/AE/JA) MATERIALS WITH QUESTION BANK AVAILABLE

TNTET /PG-TRB /TRB-POLYTECHNIC/ DEO & BEO MATERIALS ARE SENDING THROUGH COURIER.

TO CONTACT

8072230063

PG-TRB STUDY MATERIALS:–TAMIL/ENGLISH/ MATHEMATICS/PHYSICS CHEMISTRY/COMMERCE (T/M & E/M)/BOTANY (T/M & E/M)/ ZOOLOGY HISTORY (T/E)/ECONOMICS (T/E)/ GEOGRAPHY /BIO-CHEMISTRY PGTRB-COMPUTER INSTRUCTOR GRADE-I -TO CONTACT -8072230063.

SRIMAAN COACHING CENTRE-TRICHY

TO CONTACT:8072230063.

# UG-TRB

# தமிழ்

## அலகு-1

**எழுத்து** என்பது ஒரு மொழியின் அடிப்படை கூறு ஆகும். மொழிக்கு நிலைபேறு அளிப்பது எழுத்தாகும். ஒலி வடிவத்திற்கு வரிவடிவம் கொடுப்பது எழுத்து என்பர்.

எழுதப் படுவதனால் எழுத்து எனப் பெயர் பெற்றது. தமிழ் மொழி என்பது செம்மொழியாகவும் பண்டைகாலம் தொட்டே சிறந்த இலக்கண, இலக்கியங்கள் பெற்ற மொழியாகவும் உள்ளது. அவ்வாறான தமிழ் எழுத்துக்கள் படிப்படியாக சில மாறுதல்களைப் பெற்றே இன்றைய எழுத்து மொழியாக உருவம் பெற்றிருக்கின்றன.

### மொழியின் தோற்றம்:

மொழியின் தோற்றம் குறித்த ஆய்வுகள் இன்னும் நடந்த வண்ணமே உள்ளன. மொழி காலந்தோறும் மாறும் இயல்புடையது. ஒவ்வொரு கால கட்டத்திலும் மொழி எவ்வாறு அமைந்துள்ளது என விளக்கி, காலப் போக்கில் அம்மொழி அடைந்த வளர்ச்சியையும் மாற்றங்களையும் ஆய்வது மொழியியலின் ஒரு பிரிவு ஆகும்.இது மொழி வரலாறு எனப்படுகிறது.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

ஆட்டோ எஸ்பெர்சன், புளூம்பீல்டு, விட்னே, கால்டுவெல் முதலிய அயல் நாட்டாரும், ஏராளமான தமிழறிஞர்களும் மொழி குறித்த ஆய்வுகள் மேற்கொண்டனர். மொழியைப் பற்றி விரிவாக எழுதப் புகுந்த **எஸ்பெர்ஸன்** (Gesperson) அவர்கள்,

- " மனிதன் முதலில் தான் கண்ட பொருளுக்கு பெயர் வைக்கத் தெரியாத விலங்கு நிலையில் இருந்தான்; தன் இனத்தவருடன் பேச இயலாதவனாக இருந்தான்; பின்னர் நாளடைவில் அறிவையும் அனுபவத்தையும் பிறரிடம் சொல்வதற்காக அப்பொருளின் உருவத்தினைச் சித்தரித்துக் காட்டினான்; அதன் பிறகு பொருளின் பண்புகளை தன் செய்கையால் அறிவித்து அதனைப் பெற்று வந்தான்; மூன்றாவதாக குறுக்கெழுத்துப் போல ஒரு பொருளுக்கு ஒரு எழுத்து இட்டு வழங்கினான்; அடுத்து எழுத முடியாமல் பேச்சு வகையால் சொற்றொடர்களைக் குறித்த அடையாளம் தந்தான். இங்ஙனம் மொழியானது உருப்பெறுகிறது" எனத் தம் அரிய ஆராய்ச்சி நூலில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

## எழுத்துகளின் வளர்ச்சி நிலைகள்:

மேற்கண்ட கூற்றினைக் கொண்டு எழுத்துகளின் வளர்ச்சியை

1. சித்திரவெழுத்து
2. தன்மையெழுத்து
3. உணர்வெழுத்து
4. ஒலியெழுத்து

என நான்காகக் கொள்ளலாம். இதனை நன்னூல், எழுத்தியல் ஈற்றுச் சூத்திர உரையில் மயிலைநாதர் என்னும் உரையாசிரியர் விளக்கமாகக் கூறியுள்ளார். யாப்பருங்கல விருத்தி என்னும் நூலில் உரையாசிரியர் சில வேறுபாடுகளுடன் வேறு பல எழுத்து வகைகளையும் குறிக்கிறார்.

" பார்ப்பான் வழக்காகிய பதின்மூன்றெழுத்தும் ....... கட்டுரை எழுத்தும், வச்சிரம் முதலிய வடிவெழுத்தும் மற்றும் பல வகையாற் காட்டப்பட்ட எல்லா எழுத்தும் வல்லார்வாய்க் கேட்டுணர்க " (பக்கம். 568,569) என்று கூறியிருத்தல் நோக்கத்தக்கதாகும்.

மேற்கூறிய நால்வகை எழுத்துகளுள்



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

## உருவெழுத்து:

- உருவெழுத்து (சித்திர எழுத்து முறை) சிந்துவெளி மக்களிடம் ,ஹீராஸ் பாதிரியார் கூறுகிறார். இவற்றைப் பழைய எகிப்தியரும் பாபிலோனியரும் வழங்கி வந்தனர். உலக வரலாற்றிலேயே மொழி வளர்ப்பதற்காக அரசன் முன்னிலையில் சங்கம் நிறுவிய வரலாறு தமிழுக்கு மட்டுமே உண்டு.
- முதலில் தென் மதுரையில் தமிழ்ச்சங்கம் தோற்றுவித்தவன் பாண்டியன் காய்சினவழுதி. இந்த முதல் தமிழ் சங்கத்தில் கையால் எழுதாமல் வாய்மொழியாகவே இலக்கியம் வளர்த்து இருக்க வேண்டும் எனினும் சிலவற்றை மறவாமல் குறித்து வைக்கும் சூழல் வந்ததால் ஓவியமாக எழுதப்படும் ஒரு விழுதை முதல் தமிழ்ச் சங்கப் புலவர்கள் உருவாக்கிக் கொடுத்தனர்.
- இன்,அந்த ஒரு எழுத்துக்களில் சில இரண்டாம் தமிழ் சங்க காலத்திலும் பின்பற்றப்பட்டன கடல் கொண்ட குமரி நாட்டு மக்களிடம் இருந்து பிரிந்த சீன மக்கள் இந்த ஒரு எழுத்து முறையை கொண்டு போயிருக்கலாம் சிந்து வெளியில் உள்ள எழுத்துக்கள் சில சீன நாட்டு படை எழுத்துக்களை ஓரளவு ஒத்திருக்கின்றன
- இக்காலத்தில் அவற்றின் ஒலிப்பு முறை வேறாக இருந்தாலும் தோன்றிய காலத்தில் ஒலிப்புமுறை ஒன்றாக இருந்திருக்க கூடும் உலக மொழிகளில் எழுத்துக்கள் தொடக்கத்தில் எழுத்து எனும் ஓவிய எழுத்தாக இருந்த பின்னர் தனி எழுத்தான வரலாறு தெரிகிறது. ஆனால் பாண்டியன் வெண்தேர் செழியன் காலத்தில் ஒரு எழுத்துக்களை தமிழ் புலவர்கள் தனி எழுத்தாக மாற்றாமல் அதை எழுத்தாக மாற்றி விட்டனர் இதன் காரணத்தை நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.
- இரண்டாம் தமிழ் சங்க காலத்தில் தமிழை தமிழாக வளர்த்தனர் இசை தமிழுக்கு முதன்மை கொடுத்தனர் நீண்ட செய்திகளை எழுதி வைப்பதற்கு போதிய இடம் இல்லாததால் அனைத்தையும் மனப்பாடம் செய்வதற்கு இசைவடிவில் வழியில் செய்யுளே ஏற்றதா ஏற்றது ஆதலால் ஓவிய எழுத்து வடிவத்தை நேரசை நிரையசை வடிவங்களால் அமைத்தனர் இதன்படி இரு குறில் எழுத்துகளை சேர்த்து நெடில் எழுத்து உருவாகின்றனர் எழுதினால் ஆகும்.
- இந்த வழக்கம் சிந்துவெளி முத்திரைகள் இருப்பதை எடுத்துக்காட்டலாம் இரண்டு எழுத்துக்கள் ஒரு குறியீடு எனும் அசை எழுத்து முறை கிணங்க கடல் எனும் பெயரில் கடல் என ஆண்பால் குறிக்கும் வீட்டுக்கு தனிக் குறியீடு அமைத்தனர் அரை மாத்திரை குறித்த ஒரு பக்க கூடும் ஒரு மாத்திரையை குறைக்க இருக்கக்கூடும் ஆளப்பட்டுள்ளன.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

SRIMAAN COACHING CENTRE-TRICHY-UG-TRB-TAMIL STUDY MATERIAL (NEW SYLLABUS)-TO CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

- இசையை முதன்மைப்படுத்தி அவர்களே எழுத்துக்கு மாத்திரை அளவு முக்கிய நேரத்தை வகுக்க முடியும் உலகில் வேறு எந்த மொழியினரும் எழுத்துக்களை ஒலிப்பதற்கு உரிய காலத்தை மாத்திரை அளவாக குறிப்பிட்டு காட்டவில்லை இயற்றமிழ் ஆள்வதற்கு மாத்திரை அளவு தேவையில்லை காலத்தை அடிப்படையாகக் கொண்ட இசை தமிழுக்கு நேர வரம்பு கட்டாயம் தேவைப்படுகிறது.
- இதற்காகவே இரண்டாம் தமிழ் சங்க காலத்தில் அசை எழுத்து தமிழுக்கு உருவாக்கித் தந்துள்ளனர் சிந்துவெளி முத்திரைகள் அனைத்திலும் அந்த எழுத்து காணப்படுவது மட்டுமின்றி ஈழத்தில் தமிழ் தமிழகத்திலும் ஆந்திரம் மலையாளம் உள்ளிட்ட தென் மாநிலங்களிலும் கிடைத்துள்ள பானை ஓடுகள் பாறை ஓவியங்கள் ஆகியவற்றில் அசை எழுத்து வடக்குநோக்கி பரவியுள்ளது என்பதற்கான சான்றுகள் உள்ளன.
- ஏனைய மொழிகளில் தொடக்ககால எழுத்துக்களை உண்டாக்கியவர்கள் யார் என்று கண்டறிய முடியாது ஆனால் தமிழில் உரிமத்தையும் அசை எழுதியும் கண்டு பிடித்தவருக்கு உய்த்துணர முடிகிறது.

## உணர்வெழுத்து:

**உணர்வெழுத்து** என்பவை சீனர்களின் பண்டைய எழுத்து முறையாகும்.

## தன்மையெழுத்து:

**தன்மையெழுத்து** எகிப்தியர்களிடம் கணப்பட்டதாகும்."அறிவு நுட்பத்திற்கு கண்ணும் எறும்பும், அறிவின்மைக்கு ஈயும், நன்றியின்மைக்கு விரியன் பாம்பும், வெற்றிக்குக் கருடனும் பிறவுமாம்....

## ஒலியெழுத்து:

**ஒலியெழுத்து** என்பது ஒலிக்கு வடிவம் தந்து எழுதப்படுவது. இவ்வெழுத்துக்களுக்கே தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்கள் இலக்கணம் கூறுகின்றன.

## கண்ணெழுத்துக்கள்:

**கண்ணெழுத்துக்கள்** என்பன சித்திர எழுத்துக்கள் ஆகும். சங்க காலத்தில் கண்ணுள் வினைஞர்- சித்திரக் காரிகள் எனப்பட்டனர். இதற்கு 'நோக்குனர் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுகிறார். எழுதுதல் என்பதற்குச் சித்திரித்தல்' என்ற பழைய பொருளும் உண்டு.

சங்க காலத்தில் **கண்ணெழுத்து** என்ற ஒருவகை எழுத்து வழக்கில் இருந்ததாக சிலப்பதிகாரம், குறிப்பிடுகிறது. காவிரிப்பூம்பட்டினத்துத்

SRIMAAN 8072230063

துறைமுகத்தில் 'இறக்குமதி ' ஆன மூட்டைகட்கும் பண்டம் ஏற்றிய வண்டிகட்கும் கண்ணெழுத்துக்கள் இடப்பட்டிருந்தனவாம்.

1."வம்ப மாக்கள் தம் பெயர் பொறித்த கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிக் கடைமுக வாயில்"

2."எய்யா வட வளத்து இரு பதினாயிரம் கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடமும்,

என வரும் அடிகள் கண்ணெழுத்து பற்றிக் குறிப்பிடுகின்றன.
அரசாங்கத்தாருக்குத் திருமுகம்
எழுதுவோர் **கண்ணெழுத்தாளர்** எனப்பட்டனர்.

கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன் மண்ணுடை முடங்கல் மன்னவர்க் களித்து" இவற்றால்

- கண்ணெழுத்து என்பது சங்க காலத்தில் வழங்கிய ஒருவகை எழுத்தின் பெயர் என்பதும்
- வெளிநாட்டு வணிகர் (வம்ப மாக்கள்) தம் பெயர் முதலியவற்றை இந்த எழுத்துக்களிலேயே பொறித்து வந்தனர் என்பதும்
- இவ்வெழுத்துக்களிலேயே அக்கால அரசர் திருமுகம் முதலியன எழுதப்பட்டு வந்தன என்பதும் அறியலாகிறது.

இந்தக் கண்ணெழுத்து கருத்தை வெளிப்படுத்தும் எழுத்து என்பது இவற்றால் தெளிவாகிறது. தமிழில் எழுதத் தெரியாதவர்கள் தம் கருத்தை வெளிப்படுத்த எழுதி வைத்த எழுத்துக்கள் என்பதனை மேற்கண்ட பாடல் சான்றுகள் தெளிவாக்குகின்றன.

இவ்வெழுத்துக்கள் முற்காலத்தே தமிழில் வழங்கியவை என்பதை சாசன இலாகாவினின்றும் வெளிவந்த புத்தகத் தொகுதிகளை நோக்குமிடத்து அறியலாம். இவை சங்கேத எழுத்து அல்லது கரந்தெழுத்துக்கள் எனவும் வழங்கப்பட்டன. கந்தருவ தத்தை சீவகனுக்குக் கரந்தெழுத்தில் கடிதம் வரைந்ததாகத் தம் காலத்தில் வழங்கிய இக்குறியீடெழுத்துக்களைக் கொண்டு திருத்தக்க தேவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் எழுத்துகளின் தொன்மை:

- ✶ "சிந்து, பாஞ்சால தேசங்களில் உள்ள ஹரப்பா,மொஹஞ்சதரோ என்ற ஊர்களிலே சமீபத்தில் கண்டறியப்பட்ட சுமேரியர் எழுத்துக்களாகக் கூறப்படுபவை, இச்சித்திர சங்கேதக் குறிகளாகும், **5000,6000** ஆண்டுகட்கு முற்பட்டவைகளாகவும் இவை உள்ளன என்பர்.

- இதனால், அக்குறி எழுத்துக்கள் நம் தேசத்துக்கும் புறம்பானவை அல்ல என்பது தெளிவாகின்றது. அம்முறையில், நான் மேலே கூறிய எழுத்து வகைகளை நோக்குமிடத்து அப்புராதன மக்களில் தமிழரும் விலக்கப்பட்டவர் அல்லர் என்று கொள்ளக்கூடியதாம்." என்ற **மு. இராகவையங்கார்** கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது.
- இதன் மூலம் தமிழர் தம் எழுத்து நிலை நன்கு விளங்கும். மேலும் திரு பி.என். சுப்பிரமணியன் அவர்கள் **"எழுத்துக்கள் நெடுங்கணக்கின் நிலையை அடைவதற்கு முந்திய காலங்களில் பெற்றிருந்த உருவங்களைப் பற்றிய குறிப்புகள் தமிழைத் தவிர வேறு இந்திய மொழிகளில் உள்ள இலக்கியங்களில் காணப்படவில்லை"** எனக் கூறுகிறார்.
- இதனால் தமிழ் எழுத்துகள் பெற்றிருந்த சிறப்பு நிலை வளர்ச்சியின் காரணமாகவே அவை இலக்கியங்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அறியலாம்.

## தொல்காப்பியர் காலத்தில் எழுத்து நிலை:

- தொல்காப்பியர் காலத்துக்கு முற்பட்டதான இராமாயண-பாரத காலத்தில் (கி.மு.1400-கி.மு.750) வடமொழியாளர் தமிழகத்தே சிறு தொகையினராக நுழைந்து நிலைபெறலாயினர்.
- அவர் தம் வட மொழி தமிழில் சிறிதளவு கலக்கவும் பெற்றது. இக்காலத்தே வேங்கடத்திற்கும் வடக்கிருக்கும் நாடு(டெக்கான்) வட மொழி வயப்பட்டு, நாளடைவில் மாறி, தெலுங்கு, கன்னட மொழிகள் பெற்றதாக மாறியது. எனவே, தொல்காப்பியர் காலத்தில் “வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்” எனத் தமிழகம் எல்லை பெற்றது.
- "வேங்கடத் தும்பர் மொழி பெயர் தேயம்" ஆதலின், அங்கு வழங்கப்பட்ட வடமொழியையும் வடமொழிக் கலப்பு பெற்ற தெலுங்கு-கன்னட மொழிகளையும், தமிழகத்தே வழக்காறு கொண்ட வடமொழியையும் கண்ட தொல்காப்பியர்,

**"வடசொற் கிளவி வடவெழுத்த் தொரீ,**
**எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே."**

என வட சொல் தமிழில் கலத்தற்கு இலக்கணம் கூறலாயினார்.

- இந்த கால கட்டத்தில் தான் தமிழகத்தில் வடமொழியாளர்களால் **கிரந்த எழுத்துக்கள்** எழுதப்பட்டு வந்தனவாதல் வேண்டும்; தமிழகத்தே தமிழ் எழுத்துக்கள் பேரளவிலும் கிரந்த எழுத்துக்கள் சிறிய அளவிலும் எழுதப்பட்டு



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

வந்தன என்பதில் ஐயமில்லை.அதே சமயம் தக்காணப் பிரதேசத்திலும் வட இந்தியாவிலும் பிராமி எழுத்துக்கள் பரவலாயின.

- பிராமி எழுத்துக்கள் அசோகன் காலத்தில் எழுதப்பட்டன எனக் கூறுவர். இப்பிராமி எழுத்துக்களுக்கு முன் மற்றொரு எழுத்து வகை இந்தியாவில் இருந்ததாகத் தெரிகிறது.
- " சிந்துவெளிக் குறிகளுக்கும் அசோகன் காலத்திய பிராமிக்கும் இடை நிலையில் உள்ளன என்று கூறப்படும் குறிகளால் எழுதப்பட்ட சாசனம் ஒன்று மத்திய இந்தியாவில் **விக்கிரம கோல்** என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- இதனால், அசோகன் காலத்திற்கு முன்னும் சாசனங்கள் இருந்தமையும் எழுத்துக்கள் எழுதப்பட்டமையும் எளிதில் புலனாகும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் அசோகன் கல்வெட்டுகள் தமிழகத்து எல்லைப் புறத்தில் **குத்தி** எனுமிடத்திலும் மைசூருக்கு அருகே **சித்தபுரத்திலும்** கிடைத்துள்ளன. அவை பிராமி எழுத்துக்கள் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.
- அதே நூற்றாண்டில் வட நாட்டிலிருந்து தமிழ்நாடு புகுந்த சமண பௌத்தர்கள் தம் தாய் மொழியான பிராமி எழுத்துக்களில் சாசனங்களை எழுதினர். அதன் பின்னர் காலம் குறிக்கப் பெறாமல் " **திருநாதர் குன்று** " என்னுமிடத்தில் கிடைத்த சாசனம் வட்டெழுத்தில் எழுதப்பட்டதாகத் தெரிகிறது.
- இதன் பின் கி.பி. 7-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து இயற்றப்பட்ட சாசனங்களே இதுகாறும் கிடைத்துள்ளன. இதனால், தமிழகத்தில் கிரந்த எழுத்து, வட்டெழுத்து, தமிழ் என வழங்கப்பெறும் மூவகை எழுத்துக்கள் இருந்தன என்பது தெரிகின்றது.

## பிற எழுத்துகள்

- கிரந்த எழுத்துக்கள் (ஷ,ஜ,ஹ போன்றவை) வடமொழி சாசனங்களையும் தமிழ் மொழி சாசனங்களில் வரும் வட மொழிச் சொற்களையும் எழுதப் பயன்பட்டன.
- ஆனால் தமிழ் மொழியில் உள்ள சாசனங்கள் வட்டெழுத்து, தமிழெழுத்து ஆகிய இருவகை எழுத்துக்களால் எழுதப்பட்டு வந்தன.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

- தமிழகத்தில் காணப்பட்ட பிராமி எழுத்துகளும் அசோகன் பொறித்த தென் கல்வெட்டு எழுத்துகளும் ஏறக்குறைய ஒத்துள்ளன.
- அவை தமிழ் எழுத்துக்களின் அமைப்பையே அடிப்படியாகக் கொண்டவை. அவற்றிள் **க**, **ச**, **த**, **ப** ஆகிய வல்லெழுத்துக்கள் மட்டுமே காணப்படுகின்றன.
- வடமொழியில் உள்ளதைப் போல அவற்றின் வருக்க எழுத்துக்கள் பெரும்பான்மை காணப்படவில்லை. இவற்றில் வட நாட்டுப் பிராமி கல்வெட்டுகளில் காணப்படாத சில எழுத்துக்களும் கிடைக்கின்றன.

## வட்டெழுத்துக்கள்

- வட்டெழுத்துக்கள் முறை எப்பொழுது தோன்றியது என்பதை உறுதியாகக் கூற முடியாதாயினும், அஃது ஒரு காலத்தில் தமிழ்நாடு முழுமையும் பரவியிருத்தல் வேண்டும்.
- வட்ட எழுத்துகள் கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் மிகவும் வளர்ச்சியுள்ள நிலையில் ஒரு தனி வடிவத்தைப் பெற்றிருந்ததெனக் கல்வெட்டுகள் கொண்டு கூறலாம்.
- வட்டெழுத்துகளுக்கும் பிராமி எழுத்துகளுக்கும் நெருங்கிய ஒற்றுமைகள் உண்டு. பாண்டிய நாட்டிலும் மலையாள நாட்டிலுமே பெரும்பாலும் வட்டெழுத்துகளால் ஆன கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

## சோழர் காலத்தில் ஏற்பட்ட மாற்றம்

- சோழ நாட்டிலும் தொண்டை நாட்டிலும் கி.பி. 7-ஆம் நூற்றாண்டிலிருந்து பொறிக்கப்பட்ட சாசனங்கள் தமிழ் எழுத்துக்களில் உள்ளன.
- 10-ஆம் நூற்றாண்டுக்குப்பின் பாண்டி மண்டலம் சோழர் கைப்பட்டதும், அங்கும் வட்டெழுத்துகளில் சாசனங்கள் பொறிக்கப்பட்டன.
- 11-ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ் நாடு முழுதும் இவ்வகை எழுத்துக்களே வழங்கி வருகின்றன. சிலவற்றில் இருவகை எழுத்துக்களும் கலந்து காணப்படுகின்றன. இதனால் தமிழைக் குறிக்கவே தமிழகம் முழுவதும் வட்டெழுத்து இருந்தது என்பதும், பின்னரே வட்டெழுத்து முறையும் தமிழ் எழுத்து முறையும் தனித் தனியே தமிழகத்தில் இருந்தன என்பதும் அறியப்படுகிறது.
- சேரநாட்டில் சோழர் ஆதிக்கத்தால் வட்டெழுத்து வழக்கு வீழ்ந்தபின், அதன் கிளையாகக் 'கோல் எழுத்துக்கள்' தோன்றின. அவை அண்மைக்காலம் வரை வழக்கில் இருந்துள்ளன.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

SRIMAAN COACHING CENTRE-TRICHY-UG-TRB-TAMIL STUDY MATERIAL (NEW SYLLABUS)-TO CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

## வட்டெழுத்துக்களின் மூலம்

- **டாக்டர் பீலர்** என்பவர் "வட்டெழுத்துகள் பிராமி எழுத்துக்களினின்று வந்தவை; இவை தமிழ் எழுத்துக்களின் திரிபு" என்று கூறுகிறார்." வட்டெழுத்துக்கள் பிராமிக்கு மூலாதாரமான **பினீஷிய** எழுத்துகளினின்று தமிழரால் கொள்ளப்பட்டன " என்பார் **டாக்டர் பர்நெல்**.
- இதனால் தமிழ் எழுத்துக்கள் தனி வளர்ச்சியுடையன; வட்டெழுத்துக்கள் தனி வளர்ச்சியுடையன என அறியலாம். பிராமி வருவதற்கு முன்பே தமிழகம் முழுவதும் பரவியிருந்ததும்
- பண்டைகாலந்தொட்டே **உரு**, **தன்மை**, **உணர்வு**, **ஒலி**, **கண்** முதலிய எழுத்துக்களின் வாயிலாக வளர்ச்சி அடைந்ததே ' வட்டெழுத்து' என்பது பொருத்தமுடையது.
- தமிழகம் முழுதும் பரவியிருந்த வட்டெழுத்துக்களே பிராமியின் தொடர்பால் நாளடைவில் மாறுதல் அடைந்து சோழநாடு முழுவதும் கிரந்தத் தமிழாக விளங்கியது என்பது கல்வெட்டுகளால் அறியப்படும் உண்மையாகும்.
- மேலும் வட்டெழுத்துக் கல்வெட்டுக்களில் கிரந்த எழுத்துக்கள் காணப்படுதல் அரிது. கோலார், சேலம், வட ஆர்க்காடு முதலிய பகுதிகளில் கிடைத்த சில கல்வெட்டுகளில் தமிழ்-வட்டெழுத்து ஆகிய இருவகை எழுத்துக்களும் காணப்படுகின்றன.
- இவை கி. பி. 900 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இதனால் இருவகைத் தமிழ் எழுத்துக்களும் வேறு வேறு என அறியலாம். " தென் இந்தியாவில் காணப்பெறுவது வட்டெழுத்து ஒன்றே.
- பின்னரே வட மொழியாளரும் பௌத்தரும் தத்தம் எழுத்துக்களோடு (கிரந்தம்,பிராமி) தமிழகம் புக்கனர் " என **பர்நெல்** கூறுவது குறிப்பிடத்தக்கது.

## சிந்துவெளி எழுத்து- தமிழ் எழுத்து

- கி.மு. 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சிந்துவெளி மக்கள் கொண்டிருந்த மொழியே தென் இந்தியத் தமிழரும் கொண்டிருந்தனர்.
- இந்தியா முழுவதிலும் ஆரியர் வருகைக்கு முன்பு தமிழ் மொழி ஒரே வகையில் வளர்ச்சி அடைந்து வந்தது.
- சிந்துப் பிரதேசத்தில் காணப்பெற்ற சங்கேதக் குறிகளே நாளடைவில் 'விக்ரமக்கோல்' கல்வெட்டில் கண்ட வடிவம் பெற்றன.

- அவையே பின்னர் பிராமி எழுத்துக்களாக மாறின. பிராமி எழுத்திலிருந்து வேறு மாறுதல்களுடன் வடமொழிக் குறிகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றிலிருந்து கிரந்தம், கிரந்தத் தமிழ் வளர்ச்சியடைந்தன என அறியலாம்.

1. சிந்து வெளியில் காணப்படும் சித்திர சங்கேத எழுத்துக்கள் தமிழ்நாட்டுப் பழைய நாணயங்களில் காணப்படுகின்றன.
2. தமிழ் நூல்கள் மட்டுமே எழுத்துக்களின் தோற்றங்களைப் பலவகையாக விளக்குகின்றன.
3. சித்திர சங்கேத எழுத்துக்களின்று தமிழகத்தில் எழுத்துக்கள் தனி முறையில் தோற்றமாகி வளர்ச்சி பெற்று, **வட்டெழுத்து**என்ற நிலையை அடைந்திருக்க வேண்டும் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்த தமிழ் எழுத்துகள் மறைமலையடிகள், ஈ. வே. ராமசாமி போன்ற பல பெரியோர்களின் முயற்சிகளுடன் தற்போதுள்ள தோற்றம் பெற்று விளங்குகிறது எனலாம்.

- **மொழியின் தோற்றம்** என்பது, மனிதரின் படிமலர்ச்சியின் ஒரு காலகட்டத்தில், அவர்கள் மொழியைப் பயன்படுத்துவதற்கான வல்லமையைப் பெற்றதைக் குறிக்கிறது. இத் தலைப்பு, ஓமோ சாப்பியன்கள், மொழியைப் பயன்படுத்தும் வல்லமையற்ற, மனிதரல்லாத மூதாதையிலிருந்து தோன்றினர் என்பதை உட்கிடக்கையாகக் கொண்டுள்ளது.
- மொழியைப் பயன்படுத்தும் வல்லமை, ஓமோ சாப்பியன்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமைந்துள்ளது. அது, அவர்களின் வளர்ச்சிக்குப் பெருமளவில் உதவியதுடன், பிற உயிரினங்களில் இருந்து அவர்களை வேறுபடுத்தும் முக்கியமான காரணிகளுள் ஒன்றான உயிரியல் இயல்பு ஆகவும் உள்ளது.
- எழுத்து மொழியைப் போலன்றிப் பேச்சு மொழி அதன் இயல்புகள் குறித்தோ அல்லது அது இருந்ததைக் குறித்தோ எவ்விதமான நேரடி வரலாற்றுத் தடயங்களையும் விட்டுச் செல்லவில்லை.
- இதனால் மொழியின் தோற்றம் பற்றி அறிந்து கொள்வது கடினமாக இருப்பதால், இதற்காக அறிவியலாளர்கள் மறைமுகமான முறைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது.
- முக்கியமானதும், ஆய்வு செய்வதற்குக் கடினமானதாகவும் இருப்பதனால், 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் மனிதனுடைய தோற்றம் பற்றிச் சார்லசு டார்வின் தனது கோட்பாட்டை முன்வைத்த காலத்தில் இருந்தே, இத்

தலைப்புப் பெருமளவு கவனத்தை ஈர்த்து வந்திருப்பதுடன், சர்ச்சைகளுக்கும் உள்ளாகி வந்துள்ளது.

- தற்காலத்தில் தொடக்கநிலை மொழிகள் எதுவும் உலகில் பேசப்படுவது இல்லை என்பதையும், தற்போதைய மொழிகள் எல்லாமே ஒன்றுக்கொன்று ஒப்பிடத்தக்க சிக்கல்தன்மை கொண்டவையே என்றும் அறிவியலாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர்.
- தற்கால மொழிகளுடைய சொற்றொகுதிகளின் அளவும், அவை குறிக்கும் விடயங்களும் பெருமளவில் வேறுபடுகின்ற போதிலும், அவை அனைத்துமே எண்ணங்களை வெளிப்படுத்துவதற்குத் தேவையான இலக்கணம் முதலியவற்றைக் கொண்டிருப்பதுடன், இதற்குத் தேவையான சொற்களை உருவாக்கவும், மொழிபெயர்க்கவும், தேவையேற்படின் பிற மொழிகளிலிருந்து கடன் பெறவும் கூடிய வல்லமை கொண்டுள்ளன.
- எல்லாக் குழந்தைகளுமே மொழியைக் கற்றுக்கொள்வதற்கான வல்லமையைக் கொண்டுள்ளனர் என்பதுடன் குழந்தைகள் பிறக்கும்போது உயிரியல் அடிப்படையில் எந்த மொழிக்கும் சாதகமான சார்புநிலையைக் கொண்டிருப்பதும் இல்லை. மொழிகளின் படிமலர்ச்சியைப் பற்றி அறிந்து கொள்ள உதவக் கூடிய பல "அரை மொழிகள்" உள்ளன.
- மொழியின் தோற்றத்துக்கு, வாய்ப்பான உடற்கூற்று அமைப்புக்களும், அதற்கு உதவியாக மூளையில் நரம்பியல் மாற்றங்களும் ஏற்படவேண்டியது அவசியம் ஆகும். ஆனால், பிற உயிரினங்கள் சிலவற்றில் இத்தகைய மாற்றங்கள் சில காணப்படுகின்றனவாயினும், அவற்றுக்கு முழுமையான மொழி வல்லமை கிடையாது.
- மொழிப் பயன்பாட்டின் தோற்றத்துக்கு, முன் குறிப்பிட்ட வல்லமைகளை முழுமையாகப் பெற்றுக்கொள்வது இன்றியமையாதது. இது குறித்த தெளிவான நிகழ்வுகளைக் காட்டக்கூடிய வகையில் தொல்லியல் சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை.
- மொழியின் தோற்றம் குறித்த முக்கியமான விவாதம், தேவையான உடற்கூற்றியல், நரம்பியல் வல்லமைகள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும்போதே படிப்படியாக மொழிப் பயன்பாடு ஏற்பட்டதா அல்லது எல்லா வல்லமைமைகளையும் பெற்ற பின்னரே சடுதியாக மொழி தோற்றம் பெற்றதா என்பதாகும்.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

## தகவல் பரிமாற்றம், பேச்சு, மொழி

- பல அறிவியலாளர்கள், பேச்சுக்கும் மொழிக்கும் இடையில் வேறுபாடு காண்கிறார்கள். எடுத்துக் காட்டாகப், பேசும் பறவைகள் மனிதருடைய பேச்சை அவ்வாறே ஒப்புவிக்கக்கூடியவை.
- எனினும் இது மொழி வல்லமை ஆகாது. இதுபோலவே, மொழிப் பயன்பாட்டுக்கு ஒலி முக்கியமானதும் அல்ல. உடலியல் சைகைகளைப் பயன்படுத்தும் தற்காலச் சைகை மொழிகள் இதற்குச் சான்றாகும்.
- தகவல் பரிமாற்றத்துக்கும், மொழிக்கும் இடையிலான வேறுபாடும் முக்கியமானது. எடுத்துக் காட்டாக, வெர்வெட் குரங்குகளின் தகவல் பரிமாற்ற முறைகள் பற்றி விரிவான ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.
- அவை ஏறத்தாழப் பத்து வகையான குரலொலிகளை எழுப்புவதாக அறியப்பட்டுள்ளது. இவ்வொலிகளுட் பல கொன்றுண்ணிகள் வருவதைக் குறித்துத் தமது குழுவினருக்கு அறிவிப்பதற்குப் பயன்படுகின்றன.
- இவ்வொலிகளுள் ஒரு " **சிறுத்தை அழைப்பு",** ஒரு **"பாம்பு அழைப்பு",** ஒரு கழுகு அழைப்பு" என்பன அடங்குகின்றன. இவை வெவ்வேறு விதமான தற்காப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தூண்டுகின்றன. எனினும் இவ்வகைத் தகவல் பரிமாற்றங்கள் அண்மைச் சூழலின் தூண்டல்கள் காரணமான நேரடி நடவடிக்கையே அன்றி உயர்நிலை மொழி அல்ல.
- மனிதரின் பிடியில் இருந்த மனிதக் குரங்குகளும், தொடக்கநிலைச் சைகை மொழி, குறியீடுகள் போன்றவற்றைக் கற்றுக்கொடுத்தபோது இவ்வாறான தகவல் தொடர்பு வல்லமைகளை வெளிக்காட்டியுள்ளன.
- கான்சி போன்ற மனிதக் குரங்குகள் நூற்றுக் கணக்கான குறிகளைக் கற்றுக்கொண்டன. இவை எளிமையான தொடரியல் மற்றும் குறிப்பு முறைமைகளைக் கற்றுக்கொண்டாலும், அவற்றின் தகவல் தொடர்பு முழுமையான மொழியொன்றுக்கு உரிய சிக்கல் தன்மையைக் கொண்டிருக்கவில்லை.

## மனித மொழிக்கான உயிரியல் அடிப்படைகள்

### இறங்கிய குரல்வளை

- இறங்கிய குரல்வளை மனித ஒலியுறுப்புக்களுக்கே உரிய தனித்துவமான அமைப்பு என்றும், இது பேச்சு உருவாக்கத்திற்கும், மொழி உருவாக்கத்துக்கும் அவசியமானது என்றும் முன்னர்க் கருதப்பட்டது.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

SRIMAAN COACHING CENTRE-TRICHY-UG-TRB-TAMIL STUDY MATERIAL (NEW SYLLABUS)-TO CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

- ✶ எனினும் இது சில நீர்ப் பாலூட்டிகளிலும், பெரிய மான்கள் போன்ற வேறு உயிரினங்களிலும் காணப்பட்டுள்ளது. அத்துடன், நாய்கள், ஆடுகள், முதலைகள் போன்ற விலங்குகளிலும் அவை ஒலியெழுப்பும்போது, குரல்வளை இறங்குவது கவனிக்கப்பட்டுள்ளது.
- ✶ மனிதர்களில் குரல்வளை இறங்கியிருப்பது, குரல் வழியின் நீளத்தை அதிகரித்து அவர்கள் உருவாக்கக்கூடிய ஒலி வேறுபாடுகளின் எண்ணிக்கையைக் கூட்டியுள்ளது.
- ✶ இறங்கிய குரல்வளைக்கு மொழி தொடர்பற்ற செயற்பாடுகளும் உண்டு. இது விலங்கின் தோற்ற அளவைப் பெருப்பித்துக் (எதிர்பார்ப்பதிலும் குறைவாக சுருதியுடன் கூடிய குரலினூடாக) காட்டுவதற்காகவும் இருக்கலாம்.
- ✶ இறங்கிய குரல்வளை பேச்சு உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றுவதுடன், மனிதர் உருவாக்கக்கூடிய ஒலிகளின் வேறுபாடுகளை அதிகரித்தாலும்கூட, இது இந்த நோக்கத்துக்காகவே படிமலர்ச்சி அடைந்திருக்கக்கூடும் என்று கூறமுடியாது. ஓசர், சொம்சுக்கி மற்றும் ஃபிச் (2002) குறிப்பிட்டதுபோல், முன்னரே இருந்த இவ்வமைப்பை மொழித் தேவைக்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கவும் கூடும்.

## உயர்விலங்கு மொழி

- ❈ காட்டில் பெரிய மனிதக் குரங்குகளின் தகவல் பரிமாற்றம் பற்றி அதிகம் தெரியவரவில்லை. அவற்றின் குரல்வளையின் அமைப்பு, மனிதப் பேச்சில் உள்ள பல ஒலிகளை அவை உருவாக்குவதற்கு ஒத்துழைக்கவில்லை. ஆனால், முன்னர்க் குறிப்பிட்டதுபோல் மனிதரின் பிடியில் இருந்தபோது நூற்றுக்களக்கான குறியீடுகளை அவை கற்றுக்கொண்டன.
- ❈ உயர்விலங்குகளின் மூளையில் உள்ள புரோக்காவினதும், வேர்ணிக்கினதும் பகுதிகள், முகத் தசைகள், நாக்கு, வாய், குரல்வளை என்பவற்றைக் கட்டுப்படுத்துவதோடு, ஒலிகளை அடையாளம் காண்பதற்கும் பொறுப்பாக உள்ளன.
- ❈ உயர்விலங்குகள் குரல் அழைப்புக்களை எழுப்புவது அறியப்பட்டுள்ளது. இவ்வழைப்புக்கள், மூளைத்தண்டிலும், லிம்பிக் தொகுதியிலும் உள்ள சுற்றுக்களால் உருவாக்கப்படுகின்றன.
- ❈ வேர்வெட் குரங்குகள், ஏறத்தாழப் பத்து விதமான குரல் ஒலிகளை எழுப்புவதாகவும், அவற்றில் பல கொன்றுண்ணிகளின் வரவை அறிவிப்பன என்றும் முன்னர் குறிப்பிடப்பட்டது.

STUDY MATERIALS: TET / PGTRB / TRB-BEO / TRB-POLYTECHNIC / COM.INSTRUCTOR / SCERT / DIET TNPSC / TNEB / TNUSRB / TO CONTACT:8072230063



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

- ஒவ்வொரு விதமான அழைப்புக்கும், இக் குரங்குகள் வெவ்வேறு விதமான பதில் செயல்பாடுகளைக் கொண்டுள்ளன எனவும் அறியப்பட்டுள்ளதோடு, பதிவு செய்யப்பட்ட ஒலிகளையும், ஒலிபெருக்கிக்களையும் பயன்படுத்திச் செய்த சோதனைகளில் எதிர்பார்த்த வகையான செயற்பாடுகளை அறிவியலாளர்கள் அக் குரங்குகளிடம் கண்டுள்ளனர். ஒரு குட்டிக் குரங்கு அழைப்பின்போது, தாய் குழந்தையை நோக்கித் திரும்ப, பிற குரங்குகள் தாய் என்ன செய்யப் போகிகிறது என்று பார்ப்பதற்காகத் தாயை நோக்கித் திரும்புகின்றன.

## தொல் ஓமினிடுகள்

- தொல் ஓமினிடுக்களின் மொழி வல்லமை குறித்துப் பலவிதமான ஊகங்கள் நிலவுகின்றன. உடற்கூற்றியல் அடிப்படையில், சுமார் 3.5 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஓமினிட்டுக்கள் இரண்டு கால்களில் நடக்கத் தொடங்கியபோது, மண்டையோட்டில் மாற்றம் ஏற்பட்டிருக்கும் என்றும், அது கூடிய அளவுக்கு "ட" வடிவம் கொண்ட தொண்டைக் குழியை உருவாக்கியிருக்கும் என்றும், சில அறிஞர்கள் நம்புகின்றனர்.
- தொண்டைக்குழியின் வடிவமும், கழுத்துல் குரல்வளை ஒப்பீட்டளவில் கீழே அமைந்திருப்பதும் மனிதர் இன்று ஒலிக்கும் பல ஒலிகளைச், சிறப்பாக உயிரொலிகளை உருவாக்குவதற்கான முன்தேவைகள் ஆகும்.
- வேறு சில அறிஞர்கள், குரல்வளையில் அமைவிடத்தை வைத்து நோக்கும்போது நியண்டர்தால்கள் கூட மனித மொழியின் எல்லா ஒலிகளையும் உருவாக்கத்தக்க உடற்கூற்றமைப்பைக் கொண்டிருக்கவில்லை என்கின்றனர் இன்னும் சிலரோ குரல்வளை இறக்கம் பேச்சு உருவாக்கத்துடன் எவ்வித தொடர்பும் அற்றது என்கின்றனர்.

டெரெக் பிக்கெர்ட்டன் என்னும் மொழியியலாளரின் கருத்துப்படி, ஓர் அடிப்படை முந்து மொழி, திருந்தாத வடிவம் கொண்ட ஒரு தகவல் பரிமாற்றமாக இருந்ததுடன், பின்வரும் அம்சங்களையும் கொண்டிராத ஒன்றாக இருந்தது:

- முழு வளர்ச்சியடைந்த தொடரியல்
- காலம், துணைவினைகள் முதலியன
- ஒரு closed-class (i.e. non-lexical) சொற்றொகுதி

இது பெரிய மனிதக் குரங்கு மொழிக்கும், மனித மொழிக்கும் இடைப்பட்ட ஒரு நிலை ஆகும். "ட" வடிவத் தொண்டைக்குழி போன்ற உடற்கூற்றியல் அம்சங்கள் சடுதியாகத் தோன்றாமல் படிப்படியாகவே வளர்ந்து வந்துள்ளன. இதனால், தொல் மனிதர்கள், பிற தொல் உயர் விலங்குகளுக்கும், தற்கால மனிதருக்கும்



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

இடைப்பட்ட தகவல் பரிமாற்ற வடிவங்களைக் கொண்டிருந்திருப்பது சாத்தியமானதே.

## நியண்டர்தால்கள்

- 2007 ஆம் ஆண்டில் கண்டுபிடிக்கப்பட்ட நியண்டர்தாலின் நாவடி எலும்பு ஒன்று, நியண்டர்தால்கள் தற்கால மனிதர்களுடையதை ஒத்த ஒலிகளை எழுப்புவதற்கான வல்லமையைக் கொண்டிருக்கக்கூடும் என்ற கருத்தை வலுப்படுத்துகிறது.
- நாவடிக் கால்வாய் ஊடாகச் செல்லும் நாவடி நரம்பு, நாக்கின் அசைவுகளைக் கட்டுப்படுத்துகிறது. அதன் அளவு, பேச்சு வல்லமையை எடுத்துக் காட்டுவதாகக் கூறப்படுகிறது.
- 300,000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஒமினிட்டுக்களுடைய நாவடிக் கால்வாய் தற்கால மனிதருடையதைக் காட்டிலும், சிம்பன்சிகளுடைய நாவடிக் கால்வாய்களையே கூடிய அளவுக்கு ஒத்திருந்தது.
- நியண்டர்தால்கள் பேசுவதற்குரிய உடற்கூறுகளைக் கொண்டிருந்திருப்பினும் அவர்கள் ஒரு முழுமையான மொழியைக் கொண்டிருந்திருப்பார்கள் என்பது ஐயத்துக்கு உரியதே என 2004 ஆம் ஆண்டில் இரிச்சட்டு சி. கிளெயின் (Richard G. Klein) என்பார் கூறியுள்ளார்.
- இவரது ஐயம் பெரும்பாலும், தொல் மனிதரின் புதைபடிவப் பதிவுகளையும், அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது.
- ஓமோ அபிலிசுகள் தோன்றியதிலிருந்தான சுமார் 2 மில்லியன் ஆண்டுகளில் கற்கருவித் தொழில்நுட்பம் மிகவும் குறைந்த அளவிலேயே மாற்றம் கண்டுள்ளது.
- பண்டைக்காலக் கற்கருவிகள் தொடர்பில் விரிவான ஆய்வுகளைச் செய்த கிளெயின், அக் கருவிகளை அவற்றின் பயன்பாட்டு அடிப்படையில் வகைப்படுத்த முடியாதிருப்பதாகவும், அக் கருவிகளின் இறுதி வடிவம் குறித்து நியண்டர்தால்கள் அக்கறை கொண்டிருந்ததாகத் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.
- இவற்றின் அடிப்படையில், உடற்கூறுகள் தேவையான அளவுக்கு வளர்ச்சி பெற்றிருந்தால் கூட நியண்டர்தால்களின் மூளை தற்கால மொழிகளையொத்த மொழியொன்றைப் பேசுவதற்கான சிக்கல் தன்மையைக் கொண்டிருந்திருக்க முடியாது எனக் கிளெயின் கருதுகிறார்.

- நியண்டர்தால்களின் பண்பாடு மற்றும் தொழில்நுட்ப சிக்கல்தன்மை குறித்த விடயம் இன்னும் சர்ச்சைகளுக்கு உரியதாகவே உள்ளன.

## ஓமோ சாப்பியன்சு

- உடற்கூற்றியல் அடிப்படையிலான தற்கால மனிதனின் மிகப் பழைய புதைபடிவப் பதிவுகள் எதியோப்பியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதன்படி, அப்பகுதியில் மனிதர்கள் சுமார் 195,000 ஆண்டுகளுக்கு முன் தோன்றியதாகக் கருதப்படுகின்றது.
- உடற்கூற்றியலின் அடிப்படையில் தற்கால மனிதர்களை ஒத்திருந்தாலும், தொல்லியல் சான்றுகளின்படி அவர்களுடைய நடத்தைகள் முந்திய ஒமினிடுகளிலும் அதிகம் வேறுபட்டிருந்ததாகத் தெரியவில்லை. இவர்கள் முன்னரைப் போன்றே செப்பமற்ற கற்கருவிகளைப் பயன்படுத்தி வந்ததோடு, ஒப்பீட்டளவில் செயல்திறன் குறைந்த முறைகளைப் பயன்படுத்தியே வேட்டையாடி வந்தனர். எனினும், இற்றைக்குச் சுமார் 164,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே, மனிதர்களுடைய நடத்தைகள் கூடிய சிக்கல்தன்மை கொண்டவையாக மாறியிருந்தமைக்கான சான்றுகள் தென்னாபிரிக்காவில் கிடைத்துள்ளன.
- ஏறத்தாழ 50,000 ஆண்டுகளுக்கு முன் தற்கால மனிதனுக்குரிய முழுமையான நடத்தைகள் உருவாகிவிட்டதாகக் கருதப்படுகிறது. இக் காலத்தில், கடற்கரையை அண்டிய வாழ்க்கை முறைகளுக்கும், ஓட்டு மீன்களை உணவாகக் கொள்ளும் வழக்கத்துக்கு ஏற்ற கருவிகளின் சிக்கல்தன்மை வளர்ச்சிக்கும் சான்றுகள் தென்படுகின்றன.
- இந்த வாழ்க்கைமுறை, பனிக்கட்டிக்கால நிலைமைகளோடு தொடர்புடைய தட்பவெப்ப வாழிடச் சூழல் அழுத்தங்களுக்கான ஒரு எதிர்வினையாக இருக்கக்கூடும். இக்காலத்திய கற்கருவிகள் துல்லியமாக ஒரேமாதிரியான வடிவத்தில் மீண்டும் மீண்டும் செய்யப்பட்டவையாகக் காணப்படுகின்றன.
- எலும்புகள், விலங்குக் கொம்புகள் போன்றவற்றாலும் கருவிகள் செய்யப்பட்டன. அத்துடன் அக் காலத்துக் கருவிகள், பயன்பாட்டு அடிப்படையில் இலகுவாக வகைப்படுத்தக்கூடிய வகையிலும் உள்ளன. அவற்றை, எறிவதற்கான கூர்முனைகள், செதுக்குக் கருவிகள், கத்தி விளிம்புகள், துளைக் கருவிகள் என இலகுவாக அடையாளம் காண முடிகின்றது.
- பிள்ளைகளுக்கும், பிற குழு உறுப்பினர்களுக்கும், கருவிகளைச் செய்யக் கற்பிப்பது, மொழியின் துணை இல்லாவிட்டால் கடினமானது.



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



- மொழியின் படிமலர்ச்சியில் மிகப் பெரிய முன்னேற்றம், திருத்தமற்ற, பிட்யின் போன்ற தொடர்புப் பரிமாற்ற முறையிலிருந்து, தற்கால மொழிகளையொத்த இலக்கணத்துடனும் தொடரியல் அம்சங்களுடனும் கூடிய கிரியோல் போன்ற மொழியாக மாறியது ஆகும்.
- இத்தகைய ஒரு முன்னேற்றம், சடுதியான மரபணு மாற்றம் போன்றவற்றினால் ஏற்படக்கூடிய உயிரியல் மாற்றம் மூளையில் ஏற்பட்டிருந்தாலே சாத்தியம் எனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்.
- FOXP2 போன்ற மரபணு ஒன்று சடுதியான மாற்றத்துக்கு உட்பட்டிருக்கக் கூடும் என்றும், இதனால், மனிதருக்கு மொழியாற்றல் ஏற்பட்டிருக்கக் கூடும் என்றும் சிலர் கருத்துக்களை முன்வைத்து உள்ளனர்.
- இத்தகைய ஒரு சடுதியான மாற்றம் 100,000 ஆண்டுகளுக்கு முந்திய காலப் பகுதிக்கும், 50,000 ஆண்டுகளுக்கு முந்திய காலப் பகுதிக்கும் இடையில் கிழக்கு ஆப்பிரிக்கப் பகுதியில் எங்கோ ஓரிடத்தில் ஏற்பட்டிருக்கலாம் என்பதற்கான சான்றுகள் உள்ளன.
- இது சடுதியாகக் குறிப்பிடத்தக்க பல மாற்றங்களை ஏற்படுத்தியதைப் புதைபடிவப் பதிவுகள் காட்டுகின்றன. எனினும், மொழி படிப்படியாக ஆயிரக்கணக்கான ஆண்டுக் காலப்பகுதியில் வளர்ந்ததா அல்லது சடுதியாக உருவானதா என்பது இன்னும் சர்ச்சைக்கு உரியதாகவே உள்ளது.
- புரோக்கா பகுதியும், வேர்னிக் பகுதியும் மனித மூளையிலும் காணப்படுகின்றன. முதல் பகுதி அறிதிறன்சார்ந்த (cognitive) செயற்பாடுகளிலும், நிலையான (perceptual) செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றது. இரண்டாவது மொழித் திறமைக்கு உதவுகிறது. உயர் விலங்கினங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்ட மூளைத்தண்டு, லிம்பிக் தொகுதி என்பன மனிதரிலும், சிரித்தல் அழுதல் போன்ற பேச்சு அல்லாத ஒலிகளைக் கட்டுப்படுத்துகின்றன.
- இது, மனித மொழியின் மையமாக, எல்லா உயர் விலங்குகளின் மூளையிலும் காணப்படும் நரம்புச் சுற்றுக்களின் மேம்பட்ட ஒரு அமைப்பே என்பதைக் காட்டுகிறது.
- இந்த மாற்றமும், இதனால் ஏற்பட்ட மொழிசார் தகவல் பரிமாற்றத்துக்கான திறனும் மனிதனுக்கே தனித்துவமான அம்சங்களாகத் தெரிகிறது. இது, மனிதர் உயர் விலங்குக் கால்வழியிலிருந்து பிரிந்த பின்னரே மொழித்திறன் உறுப்புக்கள் அவர்களுக்கு ஏற்பட்டதைக் காட்டுகிறது.

## அறிதிறன் வளர்ச்சியும், மொழியும்:



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

SRIMAAN COACHING CENTRE-TRICHY-UG-TRB-TAMIL STUDY MATERIAL (NEW SYLLABUS)-TO CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

மொழியைப் பயன்படுத்துபவர்கள் கொண்டுள்ள முக்கியமான வல்லமை, பேசுபவரால் காணமுடியாத பொருள்களையோ, நிலைகளையோ புலப்படுத்தக்கூடியதாக இருப்பது ஆகும்.

இந்த ஆற்றல் பொதுவாக மனக் கோட்பாட்டோடு அல்லது, மற்றவர்களும் தன்னைப் போன்று தனிப்பட்ட விருப்புகளோடும் நோக்கங்களோடும் உள்ளவர்களே என்ற உணர்வுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இந்த முறைமையில் ஆறு முக்கியமான அம்சங்கள் உள்ளதாக சொம்சுக்கி, கோசர், பிச் (2002) ஆகியோர் கூறுகின்றனர்:

**மனக் கோட்பாடு**:

- பொருள் / வகை வேறுபாடுபோல, மொழியல்லாத கருத்தாக்கப் பதிலீடுகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை
- தொடர்புபடுத்தல் சார்ந்த வாயொலிச் சைகைகள்
- அறிவார்ந்த வகையில் வேண்டுமென்றே போலச்செய்தல்
- வேண்டுமென்றே செய்யும் தகவல் தொடர்புக்குச் சான்றாக சைகை உருவாக்கத்தில் தன்விருப்பக் கட்டுப்பாட்டைக் கொண்டிருத்தல் **எண் பதிலீடு**

சைமன் பாரன்-கோகன் என்பார், பின்வரும் இயல்புகள் பயன்படுத்தப்பட்டதற்கான சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, மனக் கோட்பாடு, மொழிப் பயன்பாட்டுக்கு முன்னரே உருவாகியிருக்கும் எனக் கூறுகிறார்:

- **எண்ணித் தகவல் பரிமாறல்**
- **பிழையான தகவல் பரிமாற்றத்தைத் திருத்துதல்**
- **கற்பித்தல்**
- **எண்ணித் தூண்டுதல்**
- **எண்ணி ஏமாற்றுதல்**
- **பொதுவான திட்டங்களையும், நோக்கங்களையும் கட்டியெழுப்புதல்**

✶ பாரன்-கோகன், சில உயர்விலங்குகள் இந்த எல்லா ஆற்றல்களையும் வெளிக் காட்டாவிட்டாலும், சில ஆற்றல்களையாவது வெளிக்காட்டுகின்றன என்கிறார்.

✶ கோல், தொமாசெல்லோ ஆகியோர் சிம்பன்சிகளை வைத்து நடத்திய ஆய்வுகள் இக்கூற்றை ஆதரிக்கின்றன. இந்த ஆய்வின்போது மற்றச் சிம்பன்சிகளுக்கு அறிந்துகொள்ளும்தன்மை, அறிவு, விருப்பு என்பவை

STUDY MATERIALS: TET / PGTRB / TRB-BEO / TRB-POLYTECHNIC / COM.INSTRUCTOR / SCERT / DIET TNPSC / TNEB / TNUSRB / TO CONTACT:8072230063



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

இருப்பதை ஒவ்வொரு சிம்பன்சியும் புரிந்து கொள்கிறது எனத் தெரியவருகிறது. எனினும் பிழையான நம்பிக்கைகளை அவை புரிந்துகொள்ளவில்லை.

- பல உயர்விலங்குகள் ஓரளவு மனக் கோட்பாட்டைக் கொண்டிருப்பதாகத் தெரியவரினும், அது மனிதர்களிடம் இருப்பதுபோல் முழுமையான அளவில் இல்லை.

TO BE CONTINUED.....

## STUDY MATERIALS AVAILABLE

- UG-TRB:-(ALL SUBJECT) FULL STUDY MATERIAL AVAILABLE.
- PG-TRB: (ALL SUBJECT) STUDY MATERIALS WITH QUESTION BANK AVAILABLE.
- TRB-BEO & TNPSC-DEO (TAMIL & ENGLISH MEDIUM) STUDY MATERIAL WITH QUESTION BANK AVAILABLE.
- SCERT/ DIET/ GTTI (LECTURER)-NEW SYLLABUS (2023-2024)-(ALL SUBJECT) FULL STUDY MATERIAL AVAILABLE.
- TNPSC-JSO STUDY MATERIAL AVAILABLE.

SRIMAAN COACHING CENTRE-TRICHY

TO CONTACT:8072230063.

www.Padasalai.Net SRIMAAN 8072230063

SRIMAAN COACHING CENTRE-TRICHY- TET/PG-TRB / BEO/ DEO/TRB-POLYTECHNIC/TRB-COM.INS/TNEB/UG-TRB/SCERT STUDY MATERIALS AVAILABLE- CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

TNPSC-GROUP-I C

TNPSC-DEO (District Educational Officer(Group – I C Services)
(TAMIL & ENGLISH MEDIUM) STUDY MATERIAL AVAILABLE.

TRB-BEO (Block Educational Officer)
(TAMIL & ENGLISH MEDIUM) STUDY MATERIAL AVAILABLE.

# TRB-POLYTECHNIC LECTURER-(NEW SYLLABUS) STUDY MATERIALS AVAILABLE

- MATHEMATICS STUDY MATERIAL with Question Bank.
- ENGLISH STUDY MATERIAL with Question Bank.
- PHYSICS STUDY MATERIAL with Question Bank.
- CHEMISTRY STUDY MATERIAL with Question Bank.
- MODERN OFFICE PRACTICE STUDY MATERIAL with Q.B.
- COMPUTER SCIENCE STUDY MATERIAL with Question Bank.
- INFORMATION TECHNOLOGY STUDY MATERIAL with Q.Bank.
- ECE STUDY MATERIAL with Question Bank.
- EEE STUDY MATERIAL With Question Bank.
- MECHANICAL STUDY MATERIAL With Question Bank.
- CIVIL STUDY MATERIAL With Question Bank.
- EIE STUDY MATERIAL with Question Bank.
- ICE STUDY MATERIAL with Question Bank.

SRIMAAN COACHING CENTRE-TRICHY- TET/PG-TRB / BEO/ DEO/TRB-POLYTECHNIC/TRB-COM.INS/TNEB/UG-TRB/SCERT STUDY MATERIALS AVAILABLE- CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

# UG-TRB MATERIALS

- UG TRB: TAMIL MATERIAL WITH QUESTION BANK.
- UG TRB: ENGLISH STUDY MATERIAL +Q. BANK (T/M)
- UG-TRB: MATHEMATICS MATERIAL WITH Q. BANK (E/M)
- UG TRB: PHYSICS MATERIAL WITH QUESTION BANK (E/M)
- UG TRB: CHEMISTRY MATERIAL + QUESTION BANK (E/M)
- UG TRB: HISTORY MATERIAL + Q.BANK (T/M & E/M)
- UG TRB: ZOOLOGY MATERIAL + QUESTION BANK (E/M)
- UG TRB: BOTANY MATERIAL +QUESTION BANK (T/M& E/M)
- UG TRB: GEOGRAPHY STUDY MATERIAL (E/M)

SCERT/DIET/GTTI (LECTURER) STUDY MATERIAL AVAILABLE.

# PG-TRB MATERIALS

- PG TRB: ENGLISH MATERIAL WITH QUESTION BANK.
- PG TRB: TAMIL STUDY MATERIAL +QUESTION BANK (T/M)
- PG-TRB: MATHEMATICS MATERIAL WITH Q.BANK (E/M)

SRIMAAN COACHING CENTRE-TRICHY- TET/PG-TRB / BEO/ DEO/TRB-POLYTECHNIC/TRB-COM.INS/TNEB/UG-TRB/SCERT STUDY MATERIALS AVAILABLE- CONTACT:8072230063.

2023-24 SRIMAAN

- PG TRB: PHYSICS MATERIAL WITH QUESTION BANK (E/M)
- PG TRB: CHEMISTRY MATERIAL + QUESTION BANK (E/M)
- PG TRB: COMMERCE MATERIAL WITH Q.BANK (T/M)&(E/M)
- PG TRB:ECONOMICS MATERIAL+Q. BANK (T/M & E/M)
- PG TRB: HISTORY MATERIAL + Q. BANK (T/M & E/M)
- PG TRB: ZOOLOGY MATERIAL + QUESTION BANK (E/M)
- PG TRB: BOTANY MATERIAL +QUESTION BANK (T/M& E/M)
- PG TRB: GEOGRAPHY STUDY MATERIAL (E/M)
- TNPSC-JSO STUDY MATERIAL AVAILABLE.

PG-TRB: COMPUTER INSTRUCTOR-GRADE-I (NEW SYLLABUS)-2023-2024 STUDY MATERIAL AVAILABLE

10% Discount for all materials. Materials are sending through COURIER.

TO CONTACT

8072230063

SRIMAAN